மோதலின் பின்னான மையக்கரு

centre for poverty analysis

# யுத்தத்தின் பின்னான நோக்குகள்

இல.1- செப்டெம்பர் 2013

## இனத்துவமும் நல்லிணக்கமும் - மட்டக்களப்பு மாவட்டத்தினது சம்பவம்

முஹம்மட் முனாஸ் மற்றும் காயத்ரி லொகுகே
புதிப்பு சோபனா நல்லையா



# அறிமுகம்

இலங்கையின் 30 வருட கால உள்நாட்டு போரினது முடிவானது நாட்டினை முன்னோக்கி கொண்டு செல்வதற்காக ஒன்றிணைந்து செயற்படுவதற்கான ஒரு வாய்ப்பினை இந்நாட்டு மக்களுக்கு வழங்கியுள்ளது. "நல்லிணக்கம்" எனும் செயன்முறையானது இதனை சாத்தியமாக்குவதற்கான ஒரு அடிப்படையாக காணக்கூடியதாகவுள்ளது. மிகவும் எளிய நடையில் கூறுவதாயின் நல்லிணக்கம் என்பதானது நட்புறவுகளை மீளக் கட்டியெழுப்பல் அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மக்களிடையிலான ஒரு வாக்குவாதத்தினை அமைதிப்படுத்தி சீராக்கல் என பொருள் கொள்ளப்படலாம். சமூக மற்றும் அரசியல் நல்லினக்கம் எனப் பார்க்கும் போது பல்வேறு வரைவிலக்கணங்கள் உள்ளன.

ஸ்டோப் மற்றும் பேர்ல்மன் (2001) மற்றும் ஸ்டோப் மற்றும் பார்டல் (2003) ஒருவருக்கொருவர் பரஸ்பர ஏற்றுக்கொள்ளல் மற்றும் குழுக்களின் ஒவ்வொருவரிடமுமான மாறுபட்ட மனோத்துவ ஒருமுகப்படுத்தல் என நல்லிணக்கத்தினை வரைவிலக்கணப்படுத்துகின்றனர். மோதல் நிலையிலான குழுக்கள் கடந்த காலத்தினடிப்படையில் எதிர்காலத்தினை வரைவிலக்கனப்படுத்துவதையும் விட ஒவ்வொருவரினதும் மனிதாபிமானத்தினை இனங்கண்டு ஒரு புதிதான ஆக்கபூர்வமான உறவினை விருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றனர்.

நல்லிணக்கம் என்பது ஒரு தனித்த செயற்பாடன்று. மாறாக ஒரு குறிக்கோளுடனான செயன்முறையாகும். இது முன்னேறும் வேகம் குறிப்பிடப்பட முடியாத விரைவான அடிகளை கொண்டிராத ஒரு நீண்டகால செயன்முறையாகும். இது தள்ளிவிட அல்லது சுமத்திவிட முடியாத மனப்பாங்குகள், ஆசைகள் மற்றும் உணர்வுகளிலான மாற்றங்களை உள்ளடக்கியுள்ள ஒரு ஆழமான செயன்முறையாகும். மேலும் பாதிக்கப்பட்ட மற்றும் கஷ்டங்கள் சுமத்தப்பட்ட பலரையும் உள்ளடக்கிய ஒரு பரந்த செயன்முறையாகும் (IIDEA, 2003)

வன்முறை சூழ்நிலையில் அல்லது அதன் பின்னர் உடைந்த உறவுகளை மீள்நிலைப்படுத்த மற்றும்∴அல்லது புதிய உறவுகளை கட்டியெழுப்புவதற்கு ஒரு சமுதாயத்தினை முடுக்கக்கூடிய பல செயன்முறைகளை ஒன்று சேர்ப்பதனை புரிந்து கொள்வதற்காக ஒரு திட்டவமைப்பு சட்டகத்தினை டெடெராச், செலி மற்றும் யும்பர் (ராமையா மற்றும் பொன்சேகா 2006 இல்) விருத்தி செய்தனர். இச்சட்டகத்தின் கோணக்கற்கள் பின்வருமாறு:

- கடந்த காலத்தினை நினைவு கூறலும், கையாளுதலும்.
- உடன்பாடான உறவுகளை கட்டியெழுப்புதல்.
- குறிப்பிடத்தக்களவான கலாச்சார மற்றும் மனப்பாங்கு மாற்றம்
- நல்லிணக்கத்திலான புரிந்துணர்வொன்றினை உருவாக்குவதற்கு கணிசமானளவு சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மாற்றம்.

இலங்கை உள்நாட்டுப் போரானது பெரும்பாலும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் (LTTE), இலங்கை அரசாங்கத்திற்குமிடையிலானதாகவே காணப்பட்டு வந்துள்ளது. நல்லிணக்கத்திலான கலந்துரையாடல்களில் தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் உடைந்த உறவுகள் எப்போதும் கருத்திற் கொள்ளப்படவில்லை. இச்சுருக்க ஆய்வானது குறிப்பாக கிழக்கினில் தமிழ், முஸ்லிம்களிடையிலான போலியான உறவுகளின் தோற்றங்களை ஆராய்கின்றது.

இச்சுருக்கவாய்வுக் கட்டுரையானது, இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் தமது வேறுபாடுகள் மற்றும் ஒருங்கிணைந்த வாழ்வினை சமநிலைப்படுத்தி வாழ்ந்து வந்த ஒரு நீண்டகால வரலாற்றினை கொண்டுள்ள மட்டக்களப்பு மாவட்டத்தில் வறுமை ஆராய்ச்சி நிலையத்தினால் (CEPA) மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வின் அடிப்படையிலானதாகும். தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் மிகவும் அண்மைய தரவு மட்டக்களப்பு குடித்தொகையின் 72.6மூ ஆனோர் இலங்கை தமிழர்கள் மற்றும் 25.5மூ ஆனோர் இலங்கை முஸ்லிம்கள் என காட்டுகின்றது (தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல்கள் திணைக்களம், 2012). சிங்கள மக்கள் வெறும் 1.2மூ ஆன குடித்தொகையினரே ஆவர். இக்கட்டுரையின் அடிப்படை ஆய்வானது வறுமை ஆராய்ச்சி நிலையம் மற்றும் ஒக்ஸ்பர்ட் பல்கலைக்கழக சமமின்மை, மனித பாதுகாப்பு மற்றும் இனத்துவ ஆராய்ச்சி நிலையத்தினது (CRISE) ஒன்றிணைந்த ஆய்வாக 2010 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. இதன் குறிக்கோளானது 2008-2009 இல் அபிவிருத்தி தலையீடுகள் மற்றும் மோதலில் குழு அடிப்படையிலான கிடைத்தள சமத்துவமின்மையின் தாக்கத்தில் ஒரு புரிந்துணர்வினை பெற்றுக்கொள்ளலாகும்.

## தமிழ், முஸ்லிம் சமுதாயங்களுக்கிடையே மன அழுத்தங்களை தோற்றுவித்தது எது?

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களிடையில் பல சகாப்தங்களாக கசிந்துகொண்டிருந்த மன அழுத்தங்கள் அதிகரிப்பதற்கு LTTE மற்றும் இலங்கை அரசிடையான யுத்தம் வழி செய்தது. 19ஆம் நூற்றாண்டிலிருந்தே முஸ்லிம்கள் தனியொரு இனக்குழுவினரா அல்லது வெறும் ஒரு வேறு மதத்துடையவர்களா என்பதில் பல விவாதங்கள் இருந்து வந்துள்ளன. 1885 ஆம் ஆண்டு தமிழ் தலைவர் பொன்னம்பலம் இராமநாதன் முஸ்லிம்களை ஒரு தனிப் பிரதிநிதித்துவத்தை வேண்டியுள்ள ஒரு வேறு இன குழுவினராக அடையாளப்படுத்தப்பட வேண்டிய விடயத்தை எழுப்பினார்[1]. கிழக்கு சமுதாயங்களின் ஒரு முக்கிய அம்சமாக முஸ்லிம்களிற்கு ஒரு தமிழ் அல்லாத அடையாளத்தை நிறுவுவதற்கு அல்லது அவர்களது கருத்துக்கள் மற்றும் நம்பிக்கைகள், வாழ்க்கை முறை மற்றும் கலாச்சார நெறிகளை உருவமைக்கின்ற இஸ்லாம் மார்க்கத்தின் அடிப்படையில் ஒரு அடையாளத்தை வழங்குவதற்கு அவர்கள் வெளிக்காட்டும் ஆர்வத்தினை மக்கில்வ்ரே (2008) வலியுறுத்துகின்றார். கடந்த காலங்களில் இது தமிழ் சமுதாயத்தினால் எதிர்மறையாக நோக்கப்பட்டாலும் இலங்கைப் போராட்டம் தீவிரமாகிய போது இது முன்னிலைப்படுத்தப்பட்டது.

இலங்கையின் அண்மைக்கால வரலாற்றினில், முஸ்லிம்கள் தமிழ் மக்களிலும் அரசியல் மற்றும் வர்த்தக பயன்களை அதிகம் பெற்றுக்கொள்ளும் நோக்கில் சிங்கள மக்களை ஆதரித்ததுடன் இது அவர்கள் வடக்கு மற்றும் கிழக்கில் சுய ஆட்சியை அமைக்க நாடும் தமிழீழ விடுதலைப் புலிகளை வலுவாக எதிர்க்கவும் செய்தது (இம்தியாஸ் 2008). சிங்கள அரசியல் நிகழ்ச்சி நிரல்களினை நோக்கி தெற்கு முஸ்லிம் பெருந்தகைகள் சாய்ந்தமை அரசியல் பொருளாதார சூழ்நிலையில் மிகவும் தெளிவானதுடன் இது கிழக்கின் வரலாற்றில் கலந்துரையாடல்களில் பெரிதும் ஆட்சி செய்ததாகவும் வரலாற்று நிகழ்வுகளில் குறிப்பிடப்பட்டதாகவும் காணப்படுகின்றது. இம்தியாஸ் 2008 (பக்கம் 408) இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி இஸ்மாயில் 1997 இற்கேற்ப "சுதந்திரத்திற்கு முன்பிருந்தே முஸ்லிம் அரசியல் பெருந்தகைகள் தம்மை தமிழ் மக்களிலிருந்தும் ஒரு வேறுபட்ட

[1] எம். என். எம். காமில் அஸாட், பிரித்தானியர் ஆட்சியின் கீழ் இலங்கை முஸ்லிம்கள் (நிவ் டில்லி, 1993), பக்கம் 75. http://www.crisisgroup.org/~/media/Files/asia/south-asia/sri-lanka/134_sri_lanka_s_muslims_caught_in_the_crossfire.pdf

தனி குழுவினராக பேணுவதற்காக இஸ்லாமிய நம்பிக்கையின் அடிப்படையில் ஒரு அடையாளத்தை அமைத்துக் கொள்வதில் வெற்றி கண்டிருந்தனர்'' என குறிப்பிடுகின்றார். ஆனால் தமிழ் பேசும் முஸ்லிம்கள் போராட்டத்தின் ஆரம்ப கட்டங்களில் தமிழ் மக்களை ஆதரித்ததாக சான்றுகள் கூறுகின்றன. 1970களில் தமிழ் ஆயுத குழுக்கள் இயங்கிக் கொண்டிருந்த போது சிறுபான்மையினரின் அவலங்களிற்கு எதிரான போராட்டத்தில் இணைந்து கொள்ளும் வண்ணம் முஸ்லிம் இளைஞர்களும் அவர்களுடன் இணைந்து ஆயுதம் எடுத்தனர் என ஒரு சர்வதேச இடர் குழு அறிக்கை தெரிவிக்கின்றது. (சர்வதேச இடர் குழு 2007, இம்தியாஸ் 2009, இம்தியாஸ் மற்றும் ஹுலே, 2011).

1985இல் கிழக்கில் முஸ்லிம்களிடமிருந்து பணம் பரிப்பதற்கு ஒரு தமிழ் ஆயுத குழு முயற்சித்த போது முஸ்லிம் தமிழ் மக்களிடையிலான உறவுகள் ஒரு பாரிய திருப்பத்தை எடுத்தது. இது முதலாவது தீவிர சமுதாய போராட்டத்திற்கு இட்டுச்சென்றது. இதற்கு ஐந்து வருடங்களிற்கு பின்னர், 1990 இல் வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமை நிலைமையை உச்சப்படுத்தியதுடன் கிழக்கில் முஸ்லிம் சமுதாயத்தின் மீது அடிக்கடி மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுடன் முஸ்லிம்கள் மீதான வன்முறை உச்சமாகியது. மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடியில் ஒரு வெள்ளிக்கிழமை தொழுகை நேரத்தில் 103 முஸ்லிம் ஆண்கள் கொல்லப்பட்டமை தீவிர வன்முறை நிலைமைக்குரிய ஒரு உதாரணமாகும். 1990இல், இரண்டு மாத காலத்தில் கிழக்கில் 1000 முஸ்லிம்கள் வரை LTTE இனரால் கொல்லப்பட்டதாக கணக்கிடப்பட்டுள்ளது. முஸ்லிம்களை இலக்காக கொண்ட இவ்வன்முறை செயல்கள் முஸ்லிம் இளைஞர்களை இராணுவத்தில் இணைந்து கொள்வதற்கு அல்லது இராணுவத்திற்கு தகவல் கொடுப்பவர்களாக மாறுவதற்கு வழி வகுத்தது. இலங்கை அரசாங்கம் முஸ்லிம் இளைஞர்களை தமது தமிழ் அயலவர்களிற்கெதிரான வன்முறை செயற்பாடுகளிற்காக ஆயுதமேந்துவதில் ஈடுபடுத்திய தந்திரமானது பதிலுக்குப் பதிலான வன்வெயல்களை விளைவாக்கி நிலைமையை மேலும் தீவிரப்படுத்தியது. தொடர்ச்சியான இந்நிகழ்வுகள் காரணமாக இரு சமுதாயங்களிடையிலுமான அவநம்பிக்கை இன்னும் ஆழமானது. இது எப்படியிருப்பினும் 2007 இல் உள்நாட்டில் இடம்பெயர்ந்த பெருமளவு மக்களிற்கு முஸ்லிம் பள்ளி செயற்குழுக்கள் மற்றும் வியாபாரிகள் தலைமையில் முஸ்லிம் சமுதாயம் உணவு மற்றும் உபகரணங்களை வழங்குவதனூடாக ஆதரவு வழங்கியமையை மனிதாபிமான துலங்கள் அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.

2007இல் கிழக்கு விடுதலையடைந்ததுடன் 2008இல் மாகாண சபை தேர்தல்கள் இடம்பெற்றன. இது மற்றும் 2009இல் வடக்கு யுத்தம் முடிவுற்றமை கிழக்கு மாகாணத்தின் சமூக – அரசியல் தோற்றவமைப்பினை கருதத்தக்களவு மாற்றியுள்ளது. தமிழ்மக்கள் விடுதலை புலிகளின் (TMVP) தோற்றமும் வன்முறை காலங்களுடன் தோய்ந்த அவர்களது அரசியல் செயற்பாடுகள் மற்றும் அவர்களது தேர்தல் வெற்றி என்பன பதற்ற நிலையை இன்னும் அதிகப்படுத்தின. முஸ்லிம் காங்கிரஸ் கட்சி முஸ்லிம் பெரும்பான்மையை கொண்ட நகர சபைகளையும் நிர்வாக மாவட்டங்களையும் தோற்றுவிக்க பிரச்சாரங்களை மேற்கொண்டது. இது முன்னர் ஒன்றிணைந்து அல்லது கலந்து இருந்த பிரிவுகளை மட்டக்களப்பு மாவட்ட கல்முனை பிரிவு போன்ற ஒரே இன பிரிவுகளாக பிரிந்து செல்வதற்கு வழி வகுத்தது. சர்வதேச இடர்குழு 2007 ஜனவரியில் கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஆயுதமேந்திய குழுக்களால் மேற்கொள்ளப்பட்ட வன்முறை சம்பவங்கள் மற்றும் முஸ்லிம் வர்த்தகர்களின் மீதான மிரட்டல்களையும் அறிக்கை தெரிவிக்கின்றது. இரண்டு குழுக்களிலுமிருந்து மேற்கொள்ளப்பட்ட ஹர்தால்கள்[3] வேறு வேறு குழுக்களால் இழைக்கப்பட்ட அநீதிகளை முன்வைத்து கேள்வி எழுப்பின. பின்னையது ஏதோ ஒரு அளவாக ஸ்திரத்தன்மைக்கு மீளுவதில் வெற்றிகண்டதாக காணப்படுகின்றது.

## செயலாற்றுவதற்கு ஏதும் பொதுவான அடிப்படை உள்ளதா?

மோதல் காலங்களின் போது இவ்விரண்டு சமுதாயங்களும் பெரியளவில் பிரிந்து போனாலும் கிழக்கில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் ஒரே பொதுவான மொழியினையே பேசுகின்றனர், திருமண வழியமைந்த குலமரபு அமைப்பினையே பகிர்ந்து கொள்வதுடன் திருமண ஒழுங்குகள், பழக்க வழக்கங்கள் மற்றும் கலாச்சாரங்களில் ஒரே விதமான செயன்முறைகளையே பின்பற்றுகின்றனர். வரலாற்று சமூக – கலாச்சார இடைத்தொடர்புகளுள் குடும்பங்களிடையிலான விஜயங்கள், உணவு பரிமாறல்கள் மற்றும் பரிசு வழங்கல் என்பன உள்ளடங்குகின்றன.

சாதி அமைப்பினை ஏற்றுக்கொண்டு செயற்படுத்தும் செயன்முறையே தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை வேறுபடுத்துகின்ற ஒரு முக்கிய கலாச்சார விடயமாகும். இந்து மக்களின் சாதி முறை தொடப்படமுடியாதோர் எனும் கருத்தினால் ஆளப்படுகின்ற அதே நேரம் (சில்வா குழு 2009) இக்கருத்து இஸ்லாமிய மதத்திற்கு விரோதமானதொன்றாகும். இருந்தாலும் கிழக்கு மாகாண முஸ்லிம்கள், குறிப்பாக முஸ்லிம் நிலப்பிரபுக்கள் முடிதிருத்துவோர், வாத்தியமிசைப்போர் மற்றும் வண்ணர்கள் என குடும்ப சேவைகளினை சாதிகளாக (குடிமை) பயன்படுத்துவோராக காணப்படுகின்றனர் (மக்கிலவ் 2008). முஸ்லிம் சமுதாயம் வர்த்தக செயற்பாடுகளை நோக்கிய விருப்பத்தினை கொண்டுள்ளமை அவர்களையும் சமூக இயக்கப்பாட்டுக்குரிய ஒரு வழியாக கல்வி மற்றும் முறைசார் துறை தொழில்களினை நாடுகின்ற தமிழ் மக்களையும் தெளிவான தொழிற்பிரிப்பினை கொண்டோராக காட்டுவதாகவுள்ளது.

வறுமை ஆராய்ச்சி நிலைய∴ ஊசுஜஓநு ஆய்வானது, கலாச்சார மற்றும் பொதுவான மொழியை பேசுகின்ற பொது அம்சங்களை விடுத்து இவ்விரு குழுவினரும் தத்தமது சொந்த சமுதாயங்களுள் கலந்துறவாடும் போக்கினை கொண்டுள்ளதாக காட்டுகின்றது. மட்டக்களப்பு மாவட்ட ஏறாவூர் பட்டு பிரதேசத்தில் 44.7மூ ஆன தமிழ் மக்கள் மற்றும் 38.2மூ ஆன முஸ்லிம்கள் தமது தொடர்புகள் பெரிதும் தமது இன குழுவினருள்ளேயே உள்ளதாக குறிப்பிட்டனர். தமிழ் மக்களிலும் (48.7மூ) கூடுதலான முஸ்லிம்கள் (56.9மூ) யுத்தம் முடிவுற்றதிலிருந்து அடுத்த இன மக்களுடனான தொடர்பில் ஒரு உடன்பாடான நோக்கு காணப்படுவதாக குறிப்பிட்டனர். இரு குழுவினரிடையுமான வன்முறையை ஒரு முடிவுக்கு கொண்டுவருவதில் இப்பண்பானது இவ்விரண்டு சமுதாயங்களிடையேயும் சிறந்த உறவுகளை தூண்டுவதற்கு இடமுள்ளது எனக் காட்டுவதாக கொள்ளலாம்.

மோதலின் முன்னர் ஜீவபபனோபாயங்களை தொடர்வதுடன் சமுதாயங்களிடையே நிலவிய பாரம்பரிய இடைத்தொடர்புகள் இன்னும் மாற்றமடையவில்லை. விவசாயிகள் பயிர்ச்செய்கைக்காக விதைகள், தொழிநுட்பம் மற்றும் இயந்திரங்களை பகிர்ந்து கொண்டதுடன் பயிர்ச்செய்கை, பதனிடல் மற்றும் சந்தைப்படுத்தல் என நெற்செய்கையின் பல்வேறு கட்டங்களிலும் உயர் மட்ட இடைத்தொடர்புகள் காணப்பட்டன. பொதுவாக நெற்செய்கை நிலங்கள் முஸ்லிம்களின் உரித்தாக இருக்க தமிழ் மக்கள் அவற்றில் பயிர் செய்பவர்களாக இரந்தனர். ஆனால் தமிழ் மக்களுக்கு

[2] http://temple.academia.edu/ARMImtiyaz/Papers/214574/The_Eastern_Muslims_of_Sri_Lanka_Special_Problems_and_Solutions

[3] ஹர்தால் எனும் பதம் ஏதும் தீர்மானம் எடுப்போரின் கவனத்தை யாதேனும் கோரிக்கை தொடர்பாக எடுப்பதற்காக வர்த்தகங்கள்,கடைகள்,அலுவலகங்கள் மற்றும் பாடசாலைகள் மூடப்படலை குறிக்கும்.

உரித்தான நிலங்களில் முஸ்லிம்கள் வேலை செய்பவர்களாகவும் இருந்தனர். மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் பெரும்பாலும் நெற்செய்கையின் சந்தைப்படுத்தல் துறையுடனேயே ஈடுபாடு கொண்டிருந்தனர்.

ஜீவனோபாயங்கள் தொடர்பில் இருசாராருக்கும் சமனான பரஸ்பர பங்கு காணப்பட்ட போதும் சில சந்தர்ப்பங்களில் ஒரு சமுதாயம் கூடுதல் சக்தியுடன் காணப்பட்டது. உதாரணமாக கட்டட நிர்மாணத்துறையை கொண்டால் சிங்கள மக்கள் பிரதானமாக நிர்மாணிப்பாளர்களாக இருக்க முஸ்லிம்கள் விநியோகத்துடன் தொடர்பாகவும் தமிழ் மக்கள் பணிபுரியும் ஊழியர்களாகவும் இருந்தனர். மட்டக்களப்பு மாவட்ட மீன்பிடி துறையில் முஸ்லிம்கள் கைவசம் பெரிய பல-நாள் படகுகள் சொந்தமாக இருந்தன. இன அடிப்படையிலான சந்தை தொடர்பான இடைத்தொடர்புகளும் மோதலிற்கு வழிகோலின எனும் விடயம் வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் ஆய்வொன்றினது முக்கியமான முடிவொன்றாகவுள்ளது[4] .

கிழக்கு முஸ்லிம்கள் தமிழ், சிங்களம் என இரு மொழிகளிலும் தொடர்பாடக்கூடியவர்களாக இருந்தமையால் அவர்கள் வர்த்தக கொள்வனவு – விற்பனையில் கூடுதல் ஆட்சி செய்து வந்தனர். இரு மொழிகளிலும் தொடர்பாடக்கூடியவர்களாக இருந்தமையானது இராணுவ சோதனை சாவடிகளை இலகுவாக தாண்ட உதவி செய்ததுடன் இவர்கள் கூடுதல் இயக்கப்பாட்டினை அனுபவித்தனர். மட்டக்களப்பு மற்றும் திருகோணமலையில் தெரிவுசெய்யப்பட்ட பிரதேசங்களில் வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் அண்மைய ஆய்வுப்பணிகள் தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்களம் என மூவின சமுதாயங்களுக்குமே யுத்தத்தின் பின்னர் கிடைத்துள்ள கூடுதல் சுதந்திரம் பொருளாதார செயற்பாடுகளில் கூடுதல் ஈடுபாட்டினை காட்டுவதற்கு வழிசெய்துள்ளது. உதாரணமாக தொழிலிற்காக ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு செல்லல் ஒத்துழைப்பு மற்றும் கூடிவாழ்தலிற்கான பொது அடிப்படையாக கொள்ளப்படலாம்.

## இச்சமுதாயங்களினை பிளவுபடுத்தவது எது?

இச்சமுதாயங்களிடையில் பிளவு ஏற்படுத்துவதில் பிரதானமானதாக அரசியல் அதிகாரத்திற்கான போராட்டத்தினை குறிப்பிடலாம். அதிகாரமானது பொருத்தமற்ற விதங்களில் உணர்வின்றி வன்முறைகளையும் மன அழுத்தங்களையும் அதிகரிக்கும் விதத்தில் பயன்படுத்தப்படுகின்றது. ஒரு தமிழ் அரசியல் வாதியின் மீது துப்பாக்கிச்சூட்டினை மேற்கொள்ளல் வரைக்கும் இட்டுச் சென்ற 2008 இல் ஒரு தமிழ் பிரதான அமைச்சரின் நியமனத்தினை அரசியலினால் ஏற்படுத்தப்படுகின்ற பதற்ற நிலைகளிற்கான ஒரு சிறந்த உதாரணமாக குறிப்பிடலாம். இச்சூட்டு சம்பவம் இரு சமுதாயங்களிடையேயும் வன்முறைகளை தூண்டியது. பொதுவாக அரசியல் பிரசாரங்கள் இன குழுக்களிடையே அவர்களது கடந்த கால தவறுகளை சுட்டிக்காட்டி அவர்களிடையான பிரிவினையினை பேணியவாறும் அவர்களது கடந்த கால கொடுமைகளை மக்கள் மனங்களில் தொடர்ந்தும் பதித்தவாறுமே மேற்கொள்ளப்படுகின்றன. அடையாளம் வழங்குதல் என்பது ஆபத்தற்ற ஒரு விடயமாகும். எனினும் இது மட்டுப்படுத்தப்பட்ட வளங்களை பெற்றுக்கொள்வதற்காக சமூக – அரசியல் அதிகாரத்தினை இயக்குவதற்கு பாதகமான விதத்தில் பயன்படுத்தப்படின் இது அதிஉச்ச பிரிவினைகளை ஏற்படுத்தலாம் என ஜெகா (2002) வாதிக்கின்றார். கிழக்கு மாகாண மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசியல் இலாபங்களை அடைந்துகொள்வதற்காக இன அடையாளம் பயன்படுத்தப்பட்ட இந்நிலைமையே அதிகமாக நிகழ்ந்துள்ளது.

மற்றுமொரு சர்ச்சைக்குரிய விடயமாக காணியினை குறிப்பிடலாம். தற்போதைய நிலைமையில் பெருமளவு முஸ்லிம் குடித்தொகையினர் கிழக்கின் குடித்தொகை செறிந்த சிறிய காணித் துண்டுகளில் வசிக்கின்றனர். இலங்கையின் மிக மிக குடித்தொகை செறிந்த பிரதேச செயலகப் பிரிவுகளுள் ஒன்றாக மட்டக்களப்பு மாவட்ட காத்தான்குடி பிரதேசம் உள்ளது. விளைவாக தமிழ் முஸ்லிம் மக்களிடையில் அல்லது சிங்கள முஸ்லிம் மக்களிடையிலான தோன்றுகின்ற பிணக்குகள் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களிற்கான ஒரு போட்டியிலேயே முடிவுறுகின்றன. காத்தான்குடி மற்றும் ஆரையம்பதி பிரதேச செயலக பிரிவுகளின் எல்லைகளில் தொடர்ந்து வருகின்ற பிணக்குகளினால் முஸ்லிம் மற்றும் தமிழ் சமுதாயங்கள் இரண்டுமே தமது எல்லைகளை மாற்றி கோவில் அல்லது பள்ளிவாசல் போன்ற ஒரு சமுதாய அமைப்பு கட்டடத்தினை நிர்மாணித்து தமக்குரிய பிரதேசத்தினை விஸ்தரிக்கவே முயல்கின்றன[5].

யுத்த முடிவு மற்றும் மீளல் மற்றும் உள்வாரியாக இடம்பெயர்ந்தோரின் மீள்குடியேற்றம் என்பன பயிர்ச்செய்கை நிலம் மற்றும் சில குடியிருப்பு சொத்துக்களின் உரிமை தொடர்பாக பதற்ற நிலையை ஏற்படுத்தியுள்ளன. யுத்த காலங்களில் தம்மால் பயன்படுத்திக்கொள்ள முடியாத நிலங்களை கிழக்கு முஸ்லிம்கள் கைவிட்டு வெளியேற தமிழ் மக்கள் அதனைப் பயன்படுத்தத் தொடங்கினர். ஆனால் தற்போது தாம் மீண்டதன் பின்னர் முஸ்லிம் நில உரிமையாளர்கள் தமது உரிமைமையை கோருகின்றனர். கிழக்கின் தற்போதைய மீள்குடியேற்ற திட்டம் இக்காரணிகளை கருத்தில் கொள்வதாக தெரியவில்லை. அத்துடன் இப்பிரதேசத்தின் நில உரிமை தொடர்பாக பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அரசிடமிருந்து எந்தவொரு முன்னேற்பாடான ஆதரவுமில்லை.

## வேவ்வேறு பார்வையிலான நோக்குகளும் இதில் பங்களிப்பு செய்கின்றனவா?

உண்மை நிலவரங்களை போன்றே வெவ்வேறு பார்வைகளும் அல்லது எண்ணங்களும் சிறந்த நல்லிணக்க செயன்முறையை ஏற்படுத்துவதில் முக்கியமானது என இலக்கிய ஆய்வுத்தொகுதியொன்றே பரிந்துரைக்கின்றது (ஸ்டீவர்ட் (பதிப்பு) 2008 ப்ராஸ் 1993: டிப்ரோஸ், அப்துல் காதர் மற்றும் தலயசிங்கத்தினால் மேற்கோள் காட்டப்பட்ட டிப்ரோஸ் 2009).

உருவாக்கப்பட்டுள்ள எண்ணங்கள் உடன்பாடானவையா அல்லது எதிர்மறையானவையா என்பதை தீர்மானிக்கும் முக்கிய காரணிகளாக ஒரு இடைத்தொடர்பாடலின் தரம், அடுத்து அடுத்து நிகழ்தல் மற்றும் எடுக்கும் காலம் என்பன கொள்ளப்படலாம்[6]. இரு சமுதாயங்களிடையேயும் முறையான மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட இடைத்தொடர்புகளிற்கான வாய்ப்புக்கள் மிகவும் குறைவு என வறுமை ஆராய்ச்சி நிலைய / CRISE ஆய்வு காட்டியது. மேலும் இவ்வாய்வு குறிப்பாக தமிழ் மக்கள் சமுதாயம் முஸ்லிம் சமுதாய அங்கத்தவர்களுடன் கலந்துறவாடுவதற்கான வாய்ப்புக்களை மிகவும் குறைவாக கொண்டிருந்ததாக காட்டுகின்றது. 49.3மூஆன தமிழ் மக்கள் தமது பெருமளவு அல்லது சகல வேலைத்தள சகபாடிகளும் தமது இனக்குழுவினை சார்ந்தனராக இருந்தனர் எனக் கூறினர். அட்டவணை 1 இல் காணக்கூடியதாக உள்ளபடி 28.9மூ ஆன முஸ்லிம்களே தாம் இந்நிலைமையை கொண்டிருந்ததாக குறிப்பிட்டனர்.

4 ஒரு சர்வதேச அரச சாரா அமைப்பிற்காக நடத்தப்பட்ட சந்தை ஆய்வு

5 முக்கிய நபர் நேர்காணல்

6 வார்ஷனி, ஏ. 2002. இன மோதலும் குடிமக்கள் வாழ்க்கையும்: இந்திய ஹிந்துக்கள் மற்றும் முஸ்லிம்கள். நிவ் ஹேவன்: யாலே யுனிவர்ஸடி ப்ரெஸ்

அட்டவணை 1.
உங்கள் வேலைத்தளத்தில் எத்தனை பேர் உங்கள் இனத்திலிருந்து வருகின்றனர்?

| | இலங்கை தமிழர் | இலங்கை முஸ்லிம்கள் |
|---|---|---|
| பெரும்பாலும் சகலரும் | 49.3 | 28.9 |
| அரைவாசியிலும் கூடுதலானோர் | 32.9 | 48.5 |
| சுமார் அரைவாசியானோர் | 9.3 | 17.2 |
| அரைவாசியிலும் குறைவானோர் | 7.2 | 0.0 |
| ஒருவருமில்லை | 1.3 | 5.4 |

(மூலம்: முதல்நிலை தரவு வறுமை ஆராய்ச்சி நிலையம் - ஒக்ஸ்பர்ட், 2009)

முறைசாரா விதத்திலான இடைத்தொடர்புகளிலும் இதே போன்றதொரு போக்கினையே காணமுடியுமென வறுமை ஆராய்ச்சி நிலைய∴ ஊசுஐளுநு ஆய்வு எடுத்துக்காட்டியது. 44.7மூஆன தமிழ் மக்கள் தமது அனைத்து அல்லது பெருமளவிலான சமூக தொடர்புகள் தமது சொந்த இன மக்களுடனேயே உள்ளதாக கூறிய அதே நேரம் 33.2மூ ஆன முஸ்லிம்களே இவ்வாறு கூறினர் (தரவின் சுருக்கத்திற்காக கீழே அட்டவணை 2 ஐப் பார்க்க).

அட்டவணை 2.
உங்கள் சமூக தொடர்புகளில் எத்தனை பேர் உங்கள் இனத்தினராக உள்ளனர்?

| | இலங்கை தமிழர் | இலங்கை முஸ்லிம்கள் |
|---|---|---|
| பெரும்பாலும் சகலரும் | 44.7 | 38.2 |
| அரைவாசியிலும் கூடுதலானோர் | 42.6 | 49.6 |
| சுமார் அரைவாசியானோர் | 8.9 | 4.1 |
| அரைவாசியிலும் குறைவானோர் | 3.0 | 6.1 |
| ஒருவருமில்லை | 0.8 | 2.0 |

(மூலம்: முதல்நிலை தரவு வறுமை ஆராய்ச்சி நிலையம் - ஒக்ஸ்பர்ட், 2009)

அட்டவணை 1 மற்றும் 2 இல் முன்வைக்கப்பட்டுள்ள தரவுகளிலிலிருந்து முறைசார் மற்றும் முறைசாரா இரு வழிகளிலுமே தமது சமுதாயத்திலிருந்து வெளியிலான மக்களுடன் கலந்துறவாடுவதற்கான கூடுதல் வாய்ப்புக்களை முஸ்லிம்கள் கொண்டிருந்ததென தெளிவாகின்றது. ஆனால் அவர்களது முறைசார்ந்த இடைத்தொடர்புகளிலும் சமூக இடைத்தொடர்புகளின் பல்லினத்தன்மை குறைவாக காணப்பட்டது.

அவர்கள் தமது சமுதாயத்திலிருந்தும் வெளியில் யார் யாருடன் தொடர்பு கொண்டுள்ளனர் என்பது தரவுகளிலிருந்து தெளிவாக காணக்கூடியதாக இல்லை. மொழி ஒரு மட்டுப்படுத்தும் காரணியாக உள்ள அதே நேரம் முஸ்லிம்கள் வர்த்தகர்களாக தமிழ் மற்றும் சிங்களம் என இரு மொழிகளிலும் தொடர்பாடக்கூடியவர்களாகவும் தமிழ் மக்கள் பெருமளவில் தமிழில் மாத்திரம் உரையாடுபவர்களாகவும் உள்ளனர். எனவே இம்மொழியாற்றல் முஸ்லிம்களிற்கு தமது சமுதாயமல்லாதோருடன் இடைத்தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளும் ஒரு நன்மையினை ஏற்படுத்துகின்றது.

அடுத்த இன குழுக்களுடன் அதிக தடவைகளில் இடைத்தொடர்புகளை மேற்கொள்வதற்கான வாய்ப்பானது முஸ்லிம் சமுதாயத்திற்கு அடுத்த இன மக்கள் தொடர்பாக சிறந்த எண்ணங்களை கொண்டிருக்க வாய்ப்பு கொடுத்ததாக காணக்கூடியதாகவுள்ளது. 48.7மூஆன தமிழ் மக்களிலும் 56.9மூஆன முஸ்லிம்கள் அடுத்த இனம் தொடர்பான தமது எண்ணம் உடன்பாடான விதத்தில் மாறியுள்ளதாக தெரிவித்துள்ளனர் (இக்கேள்விக்கு கொடுக்கப்பட்டுள்ள தரவுகளிற்காக அட்டவணை 3ஐப் பார்க்க). உயிர்களிற்கும் தற்போது கிழக்கெங்கும் பரவி காணப்படுகின்ற சமாதான சூழலிற்கும் நேரடியான அச்சுறுத்தலாக இருந்த வன்முறையின் நிறுத்தத்திற்கு இவ்வுடன்பாடான தன்மையை ஒரு இலட்சணமாக கொள்ளலாம்.

உயர் மட்டத்திலான இடைத்தொடர்புகள் அடுத்த இன குழுக்கள் மீதான அதிக உடன்பாடான எண்ணங்களிற்கு இட்டுச்செல்லும் என வார்ஷி (2002) குறிப்பிடுகின்றார். இந்நிலைப்பாட்டினை வறுமை ஆராய்ச்சி நிலைய∴ ஊசுஐளுநு உறுதி செய்வதாகவே தோன்றுகின்றது. நிலைமை இப்படியெனில் இரு சமுதாயத்தினரிடையேயுமான இடைத்தொடர்புகளை விருத்தி செய்வதற்கான நிலையான முயற்சிகள் ஒருவருக்கொருவரிலான சிறந்த மற்றும் உடன்பாடான எண்ணங்கள் மற்றும் நோக்குகள் உருவாவதற்கு வழிவகுக்கும். இவ்வாறு உண்மை நிலவரத்தினை போன்றே முக்கிய பங்கினை மக்கள் பார்வைகளும் கொண்டிருக்கும் போது இம்முயற்சிகள் எண்ணங்களில் மாற்றங்களை உண்டாக்கி இன்னும் உணர்வுபூர்வமான சமுதாய உறவுகளிற்கு வழி வகுக்கும்.

அட்டவணை 3.
அடுத்த இனத்தை பற்றிய உங்கள் பார்வை

| | இலங்கை தமிழர் | இலங்கை முஸ்லிம்கள் |
|---|---|---|
| மாற்றமில்லை | 46.8 | 39.1 |
| கூடுதலாக எதிர்மறையானது | 4.5 | 4.0 |
| கூடுதலாக உடன்பாடானது | 48.7 | 56.9 |

(மூலம்: முதல்நிலை தரவு வறுமை ஆராய்ச்சி நிலையம் - ஒக்ஸ்பர்ட், 2009)

மேலடை பகட்டு மரியாதைகளிலும் கீழ் செல்லும் ஒரு முயற்சியாகவும் சமுதாய இடையிலான உறவுகளுள் எந்த மட்டத்தில் மக்கள் சௌகரியமாக உணர்கின்றனர் என்பதை சோதனை செய்யவும் என வறுமை ஆராய்ச்சி நிலைய∴ ஊசுஐளுநு அவர்களது மகள்∴ சகோதரி∴ மகன்∴ சகோதரன் அடுத்த இனத்திலிருந்த ஒருவரை மணம் செய்து கொள்வதனை அவர்கள் எதிர்ப்பார்களா எனும் வினாவினை பதிலளிப்பாளர்களிடம் வினவியது. பெருமளவு முஸ்லிம் பதிலளிப்பாளர்கள் உயர் மட்ட இடைத்தொடர்புகளை கொண்டிருந்ததாக கூறினாலும் (அட்டவணை 2 ஐப் பார்க்க) மற்றும் தமிழ் சமுதாயத்தினை பற்றி கூடுதல் உடன்பாடான எண்ணங்களை கொண்டிருந்தாலும் அவர்களில் பெரும்பாலானோர் (தமிழ் மக்கள் 50மூ எதிர்க்க இவர்கள் 76.6மூ) தமது குடும்பங்களில் இனங்களிடையான திருமணத்தினை எதிர்ப்பதாகவே தெரிவித்தனர். முஸ்லிம்கள் இவ்வாறான உறவுகளிற்கு விருப்பமின்மையை காட்டுவதற்கான பிரதான காரணம் அவர்களது மதமாக இருக்கலாம்.

அட்டவணை 4.
'உங்கள் மகள்.'. சகோதரி.'. மகன்.'. சகோதரன் அடுத்த இனத்திலிருந்த ஒருவரை மணம் செய்து கொள்வதனை நீங்கள் எதிர்ப்பீர்களா' எனும் கேள்விக்கான பதில்களின் சுருக்கம்

| | உங்கள் மகள்/ சகோதரி அடுத்த இனத்திலிருந்த ஒருவரை மணம் செய்து கொள்வதனை நீங்கள் எதிர்ப்பீர்களா? | | உங்கள் மகன்.'. சகோதரன் அடுத்த இனத்திலிருந்த ஒருவரை மணம் செய்து கொள்வதனை நீங்கள் எதிர்ப்பீர்களா? | |
|---|---|---|---|---|
| | இலங்கை தமிழர் | இலங்கை முஸ்லிம்கள் | இலங்கை தமிழர் | இலங்கை முஸ்லிம்கள் |
| ஆம் | 50 | 23.4 | 50.4 | 23.4 |
| இல்லை | 50 | 76.6 | 49.6 | 76.6 |

(மூலம்: முதல்நிலை தரவு வறுமை ஆராய்ச்சி நிலையம் - ஒச்ஸ்பர்ட், 2009)

## முன்னோக்கிய சில வழிகள்

கிழக்கு மாகாணத்தின் மூவின சமுதாயங்களிடையேயும் உறவுகளில் நல்லிணக்கம் ஏற்படுத்தும் பணிகளில் பல அமைப்புக்கள் ஈடுபட்டுள்ளமை அறியக்கூடியதாகவுள்ளது. இலங்கையின் நடைமுறையிலுள்ள நான்கு மதங்களுமான பௌத்தம், கிறிஸ்தவம், ஹிந்து மற்றும் இஸ்லாம் மதத் தலைவர்களுடன் பணியாற்றுகின்ற மற்றும் இளைஞர்கள், மீனவர்கள் அல்லது வர்த்தகர்கள் போன்ற வித்தியாசமான குழுக்களுடன் பணியாற்றுகின்ற அமைப்புக்கள் உள்ளன. இருந்தாலும் பொதுவாக இம்முயற்சிகள் சிறந்த முறையில் ஒருங்கமைக்கப்படாது தனித்தனியாகவே நடைபெறுகின்றன. இம்முயற்சிகளிடையே சிறந்த ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பு என்பன காணப்படுமிடத்து இது பலமாக சமுதாய இடைத்தொடர்புகளிற்கு இட்டுச் செல்வதன் மூலம் இன்னும் பலமான நிலைபேறான யுத்தத்தின் பின்னான நல்லிணக்க செயன்முறைக்கு வழிவகுக்கும்.

உடன்பாடான இடைத்தொடர்பு மற்றும் நல்லிணக்கத்தை அடைந்து கொள்வதற்கான நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கு கூடிய முயற்சியும் நேரமும் செலவழிக்கப்பட வேண்டும் என இலக்கியங்கள் பரிந்துரைக்கின்றன[7]. வறுமை ஆராய்ச்சி நிலைய/ CRISE ஆய்வு அதிகளவு இடைத்தொடர்பு உடன்பாடான உறவுகளிற்கு இட்டுச் செல்லும் எனவும் இக்கண்டுபிடிப்பிலிருந்து இடைத்தொடர்புகளிற்கான வாய்ப்புகளை உருவாக்குவதினூடு நல்லிணக்கச் செயன்முறை கட்டியெழுப்பப்படுகிறது எனவும் காட்டுகின்றது.

குறிப்பாக தமிழ் மற்றும் முஸ்லிம் சமுதாய இளைஞர் குழுக்களிடையில் இடைத்தொடர்புகளை ஊக்குவிப்பதற்கு கொள்கை உருவாக்குவோர் மற்றும் செயற்பாட்டாளர்கள் பரிந்துரைக்கின்றனர். கிழக்கு மாகாண இளைஞர்களின் ஒரு பரம்பரையினர் யுத்தம் மற்றும் மோதல் தவிர வேறெதுவும் அறியாதவர்களாகவுள்ளனர். இவ்விளம் பெண்கள் மற்றும் ஆண்களை ஒரு பல்லின சூழலில் இடைத்தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளவைப்பதானது 'அடுத்த' குழுவினை நோக்கிய ஒரு உடன்பாடான மனப்பாங்கினை உருவாக்கிக் கொள்ளவும் முன்னைய பரம்பரைகளிடமிருந்த தப்பெண்ணங்களிற்கு சவாலாக 'மாற்றத்தினை ஏற்படுத்தும் முகவர்களாக' மற்றும் 'எதிர்கால தலைவர்களாக' இவர்களை மாற்றவும் வழிவகுக்கும்.

இவ்விரு குழுக்களிடையேயுமான மனஅழுத்தங்களிற்கு இட்டுச் செல்கின்ற ஒரே மாதிரியான சில நோக்குகள் மற்றும் மனப்பாங்குகளிற்கு சவாலாக ஊடகத்துறையும் முக்கியமானதாகும். முஸ்லிம் மற்றும் தமிழ் மக்கள் ஒரு பொதுவான மொழியை பயன்படுத்துவதாலும், அவர்கள் இருசாராரும் தமிழ் மொழி ஊடகத்துடன் இணைந்துள்ளதாலும் எதிர்மாறான நோக்குகள் மற்றும் மனப்பாங்குகளை உடைத்து விடுவதில் ஊடகத்துறைக்கு ஒரு வாய்ப்புள்ளது.

கடந்த காலங்களை நினைவுகூறாமல், கையாளாமல் நல்லிணக்கம் இடம்பெற முடியாது என கலந்துரையாடல்கள் கூறுகின்றன. இங்கு குறிப்பிடப்பட்ட நிலைமைகளில் 'கடந்த காலங்களை கையாளுதல்' அல்லது 'உண்மை நிலை தேடல்' என்பன 'பழைய காயங்களை திறந்து' மங்கிப்போயுள்ள கடந்த கால அவலங்களிற்கு புத்துயிரூட்டும் என்பதற்கு அதிக சாத்தியமுள்ளது. எனவே உண்மை தேடல் என்பது உணர்வுபூர்வமாக மேற்கொள்ளப்பட்டு உள்ளூர் மட்டத்தில் ஆராயப்பட வேண்டும்.

## நல்லிணக்க செயன்முறைக்கு முன்னிற்கக்கூடிய சவால்கள்

கிழக்கிற்கான அபிவிருத்தித் திட்டங்கள் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களிடையே காணப்படுகின்ற அழுத்தங்களை கருத்தில் கொண்டுள்ளனவா என்பது பற்றிய தெளிவில்லை. ஆனால் இதனை கருத்திற் கொள்ளப்படாமையானது தற்போது நிலவி வருகின்ற மென்மையான சமாதான மனநிலையிலும் பாதிப்பை ஏற்படுத்தும் ஆபத்துள்ளது.

சில அரச அதிகாரிகள் நல்லிணக்க செயன்முறையை சந்தேகத்துடன் நோக்குகின்றனர். எனினும் இத்துறையிலான எல்லா பிரதான அங்கத்தவர்களையும் இச்செயன்முறையில் உயிர்ப்புடன் ஈடுபடவைக்க வேண்டிய தேவையை கொண்டுள்ளனர். இச்செயன்முறையின் வெற்றிக்கு அரசின் உள்வாங்கப்படலானது மிகவும் முக்கியமாகும்.

நல்லிணக்க செயன்முறையில் ஈடுபட்டுள்ளோர் தமது செயல் முயற்சிகள் பிரதியெடுக்கப்படாது சிறந்த செயன்முறை பகிரப்பட்டு வெற்றிக்கான வாய்ப்புக்களை உறுதிப்படுத்தும் வண்ணம் தமது செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கான தேவையுடையோராயுள்ளனர்.

இளைஞர்களை இயக்குவதுடனான பிரச்சினைகள் முன்வைக்கப்படலாம் என்பதால் இளைஞர்களுடனான மற்றுமொரு சிக்கலான விடயப் பகுதி கவனத்தில் கொள்ளப்பட்டு செயலாற்றப்படும். மீண்டும் தற்போது நிலவுகின்ற மென்மையான சமநிலை பாதிக்கப்படுவதை தவிர்க்கும் வண்ணம் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதற்குரிய கவனம் தேவை.

---

7 லெடெராச் குழு. ராமையா, டி.ஏ. மற்றும் பொன்சேகா, டி, (2006). இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் சமாதான செயன்முறை: ஜனநாயக சீர்திருத்தத்திற்காக கொள்கை தெரிவுகளிற்கான திட்டவமைப்பு சட்டகங்கள், சவால்கள் மற்றும் முன்னோக்கிய வழிகள். ஜனநாயகம் மற்றும் தேர்தல் உதவிக்கான சர்வதேச நிறுவனம், ஸ்டொக்ஹோம்: சுவீடன்.

# உசாத்துணைகள்


Brass, Paul R., 2003. *The Production of Hindu-Muslim Violence in Contemporary India*, Seattle: University of Washington Press.

Centre for Poverty Analysis, 2010. Livelihoods and Market Study: Assessing Conditions in Selected GNs of Batticaloa and Trincomalee Districts (unpublished).

Department of Census and Statistics, 2007. *Special Enumeration for Batticaloa 2007: Basic Population Information on Ampara – 2007*, Preliminary report based on a special enumeration, Department of Census and Statistics, accessed on 22 October 2008, <http://www.statistics.gov.lk/PopHouSat/Preliminary%20Reports%20Special%20Enumeration%202007/Basic%20Population%20Information%20of%20Batticaloa%20District%202007.pdf>

Diprose, R., Abdul Cader, A. and Thalayasingam, P. (forthcoming), *Conflict-Sensitivity, Development Effectiveness, Inequalities, and Conflict in Sri Lanka: Understanding Aid Programming, Voice and Action in Local Conflict-affected Environments*, Centre for Research on Inequality, Human security and Ethnicity, Oxford University, Oxford and Centre for Poverty Analysis , Colombo.

Imtiyaz, M., 2009, The Eastern Muslims of Sri Lanka - Special Problems and Solutions, *Journal of Asian and African Studies*, Vol. 44 (4), pp. 407-427, accessed 01 July 2012, <http://temple.academia.edu/ARMImtiyaz/Papers/214574/The_Eastern_Muslims_of_Sri_Lanka_Special_Problems_and_Solutions>

Imtiyaz, M., and Hoole, H., 2011, Some Critical Notes on the Non-Tamil Identity of the Muslims of Sri Lanka, and on Tamil–Muslim Relations. *South Asia: Journal of South Asian Studies*, Vol. 34 (2), August 2011, pp. 208-231.

International Crisis Group, 2007. Sri Lanka Muslims Caught in the Crossfire, *Asia Report No 134,* accessed 01 July 2012 <http://www.crisisgroup.org/~/media/Files/asia/south-asia/sri-lanka/134_sri_lanka_s_muslims_caught_in_the_crossfire.pdf>

International Crisis Group, 2008. Sri Lanka's Eastern Province: Land, Development, Conflict, *Asia Report No 159*, accessed on 01 July 2012

Jega, A. M., 2002, 'Tackling Ethno-Religious Conflict in Nigeria', *The Nigeria Social Scientist*, Vol. 5 (2), pp. 35-39.

Kamil Asad, M., 1993. *The Muslims of Sri Lanka Under British Rule*, p. 75, New Delhi.

McGilvray, B., 2001. *A History of Ethnic Conflict in Sri Lanka: Tamil and Muslim Identities in the East*, Marga Monograph Series on Ethnic Reconciliation, Marga institute, Colombo,

McGilvray, B., 2008. *Crucible of conflict: Tamil and Muslim Society on the East Coast of Sri Lanka*, Social Scientists' Association, Colombo.

McGilvray, B. and Raheem, M. 2007, *Muslim Perspectives on the Sri Lankan Conflict*, East-West Center Washington, Washington, 01 July 2012 at <http://www.eastwestcenter.org/sites/default/files/private/ps041.pdf>

Peace and Conflict Timeline, accessed 01 July 2012 <http://pact.lk/>

Ramiah, D.A. and Fonseka, D., 2006. *Reconciliation and the peace process in Sri Lanka: frameworks, challenges and ways forward*, Policy options for democratic reform, International Institute for Democracy and Electoral Assistance, Stockholm, Sweden.

Silva, K. T., P. P. Sivapragasam and P. Thanges. 2009. *Caste Discrimination and Social Justice in Sri Lanka: An Overview*, Indian Institute of Dalit Studies, Working paper series - Vol 3 (6), New Delhi, accessed 01 July 2012 <http://idsn.org/fileadmin/user_folder/pdf/New_files/Publications_from_network/Caste_discrimination_and_social_justice_in_Sri_Lanka__IIDS_working_paper_.pdf>

Stewart, F. (ed.) 2008. *Horizontal Inequalities and Conflict: Understanding Group Violence in Multi-ethnic Societies*, London: Palgrave.

Varshney, A., 2002. *Ethnic Conflict and Civic Life: Hindus and Muslims in India*, New Haven, Yale University Press.

வறுமை ஆராய்ச்சி நிலையமானது (CEPA) ஒரு சுதந்திரமான, வறுமை தொடர்பான அபிவிருத்தி விடயங்களில் சிறந்த புரிந்துணர்வினை தூண்டுவதற்கான இலங்கையின் ஒரு கருத்து தாங்கியாகும். CEPA வறுமை ஒரு வெற்றிகொள்ளப்பட வேண்டிய அநீதியாகும் என நம்புவதுடன் இதனை வெற்றிகொள்ளலானது வறுமையில் வாடும் மக்களுடன் இணைந்து செயற்படுவதற்கும் மேலாக தேசிய மற்றும் சரிவதேச ரீதியில் கொள்கைகள் மற்றும் செயன்முறைகளில் மாற்றங்கள் ஏற்படுவதையும் உள்ளடக்கியுள்ளது என நம்புகின்றது. இதன் பணிகளினூடாக CEPA தேசிய, பிராந்திய, துறைசார்ந்த, நிகழ்ச்சித்திட்ட மற்றும் செயற்திட்ட மட்டங்களில் வறுமை தொடர்பான கொள்கைகளில் செல்வாக்கு செலுத்தவதற்கு முயற்சிக்கின்றது.

வறுமை எனும் பரந்த குடையின் கீழ் வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் பணிகள் மோதலின் பின்னான அபிவிருத்தி, உட்கட்டமைப்பு அபிவிருத்தி, பலவீனமான தன்மை, புலம்பெயர்வு மற்றும் சூழல் எனும் ஐந்து மையக்கரு பிரிவுகளில் அமைந்துள்ளன. மோதலின் பின்னான மையக்கருவானது மோதலின் பின்னான அபிவிருத்தியை கண்காணிக்க நாடுவதுடன் தற்போதுள்ள சமமின்மை மற்றும் முரண்பாடுகளை இன்னும் ஆழமாக்காத விதத்தில் பொருளாதார நன்மைகள் அடையப்படுவதனை உறுதி செய்வதில் அரச மற்றும் அரசு – சாராத பாத்திரங்களிற்கு ஆதரவளிக்கின்றது.

ISSN No: ISSN 2345-945x

ISSN 2345-945x

9 772345 945001

The Asia Foundation

cepa
centre for poverty analysis

29, R G Senanayake Mawatha,
Colombo 7, Sri Lanka
Tel:+94 (011) 4690200, 2676955
Fax: +94 (011) 2676 959
E-mail: info@cepa.lk
www.cepa.lk